கவன ஈர்ப்புகள்

திரு. கா. இராசாராம்

1,500 ஏக்கர் உபரி கரும்பை அருகிலுள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கொடுக்க ஏற்கனவே சர்க்கரைத் துறை இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே 15 மாதங்கள், 16 மாதங்கள் ஆகின்றது என்கின்ற நிலைக்கு விளக்கமாக இங்கே பதில் சொல்லவில்லை. இருந்தாலுங்கூட, அங்கே அரவைப் பயன்படுத்துகின்ற அரவையாளர்களுக்கு ஏறக்குறைய 15, 16 மாதங்கள் ஆகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆற்காடு, ஆரணி, செய்யாறு வட்டங்களைச் சேர்த்து, அந்தப் பகுதியிலேயிருக்கிற மாம்பாக்கம் பகுதியிலே, தமிழ் நாடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுடைய பி. பிளாண்டை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

(18) எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ரகுமான்கான் அவர்கள், ''சென்னை மணலியில் உள்ள எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கழிவு வாயு வெளியாகும் குழாய் வழியாகத் திடீரென்று திராவகமும் தாரும் வெளியேறி தீப்பிடித்தது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர அறிவிப்பு கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை.

அறிக்கை

29–4–1986 அன்று தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் (Chief Inspector of Factories) எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை பார்வையிட்டு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின்—தொழிற்சாலை எண் 1 (Plant I) 17–4–1986 அன்று பராமரிப்புக்காக மூடப்பட்டது. பராமரித்த பிறகு மறுபடியும் தொழிற்சாலையில் இயந்திரத்தை ஆரம்பிக்கும் போது தொழிற்சாலையில் பயன்படாத காற்றுடன் எண்ணெயும் மேல் உச்சிக்கு அனுப்பப்பட்டது. அப்போது, வெளியேற்றும் தொட்டி உடைந்து அதிலிருந்து திரவ எண்ணெயும் பயன்படாத காற்றும் (Waste Gas) எல்லா இடங்களிலும் சிதறி அங்கு வளர்ந்துள்ள புல் தரையில் தீப்பிடித்துவிட்டது. வெளியேற்றும் தொட்டியில் (Knockout Tank) அன்று அளவுக்கு அதிகமான எண்ணெயும் காற்றும் வெளியேறியதுதான் தீப்பிடித்த

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தற்கான காரணம் ஆகும். மேலும் தீப்பிடித்ததற்கு வெளியேற்றும் தொட்டியின் கொள்திறன் மிகவும் குறைவானது என்றும், திரவம் அளவைக் காட்டும் இயந்திரம் ஒலிக்கும் அலாரம் ஆகியவை சரியாக வேலை செய்யாததும் காரணம் ஆகும். தீப்பிடித்த உடனே தொழிற்சாலையிலுள்ள தீ அணைக்கும் கருவி மூலம் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டு விட்டது.

(19) பாரதிதாசன் பல்கலைக் கழகத்து தேர்வினர்த் தாள்கள் முன் கூட்டியே வெளியானதால் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பி.காம் முதலாண்டு கணக்குப் பதிவியல் (அக்கவுண்டன்சி) தேர்வுக்கான கேள்வித்தாள் முன் கூட்டியே வெளியானதால் தேர்வு நடத்த முடியாமல் போனதினால் சம்பந்தப்பட்ட மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோர்களிடமும் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே, கேள்வி பேப்பர் வெளியானதாகச் சொல்லப்பட்டு, அந்தப் பிரச்சினையைக் காவல் துறையின் மூலமாக விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 28 ஆம் தேதி நடைபெற இருந்த தேர்வினைப் பல்கலைக் கழகம் ஒத்தி வைத்திருக்கிறது. ஒத்தி வைக்கப்பட்ட தேர்வுக்கான நாள் பல்கலைக் கழகத்தால் விரைவில் அறிவிக்கப்படும். 29 ஆம் தேதி நடைபெறவிருந்த தேர்வு திட்டமிட்டபடி அதே நாள் நடைபெற்றது. வேறு வினாத்தாள் தயாரிக்க கால அவகாசம் இருந்த காரணத்தால், அதை வைத்து, நடத்தப்பட்டிருக்கிறது. 30 ஆம் நாள் முதல் தேர்வுகள் திட்டமிட்டபடி சுமுகமாக நடத்தப்பட்டன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வித்தாள் வெளியாவது என்பது இப்பொழுது அதிகமாக இருந்து வருகிறது. வெளியேறாத அளவுக்கு, சரியாக, கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுத்திருந்தால், எப்படிக் கேள்வித்தாள் வெளியாகும்? இது கவனத்திற்குரிய விஷயம். அதுவும் பல்கலைக் கழகம் நடத்தக்கூடிய முக்கியமான தேர்வு